# அவதூறுகளை புறந்தள்ளுவோம்..

12-03-2019.

அன்பார்ந்த தோழர்களே,

BSNLல் பணியாற்றும் ஊழியர்களுக்கு பிப்ரவரி மாத ஊதியம் இதுவரை தரப்படவில்லை. இதன் காரணமாக இதில் பணியாற்றும் ஊழியர்களும் அவர்களின் குடும்பங்களும் கடும் சிரமத்திற்கு உள்ளாகி உள்ளனர் என்பது மிகக் கொடுமையானது. அதன் காரணமாக ஊழியர்கள் மனதில் பல்வேறு குழப்பங்கள் ஏற்பட்டுள்ளது. இதனைக் கணக்கில் கொண்டு அகில இந்திய அளவில் AUAB தலைவர்கள் பல்வேறு விதமான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆனால் ஒரு சிலர், ஊழியர்கள் மத்தியில் மேலும் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு விதமான வதந்திகளை பரப்பி வருகின்றனர். ஊழியர்களிடம் உண்மையை சொல்லாமல், சுயநலன்களுக்காக பொய்யான தகவல்களை பரப்பி வருகின்றனர். அவர்களின் நோக்கம் என்பது ஊழியர்களின் நலன்களுக்காகவும், இந்த நிறுவனத்தை பாதுகாக்கவும் தொடர்ச்சியாக தன்னலமற்று செயல்பட்டு வரும் தலைவர்கள் மற்றும் இயக்கங்களின் மீது சேற்றை வாரி இறைப்பது என்பது தான். இவர்கள் அமைத்துள்ள அமைப்புகள் ஊழியர்கள் மத்தியில் செல்வாக்கை பெறாத காரணத்தால், பல்வேறு பிரிவினைகளை ஊழியர்கள் மத்தியில் ஏற்படுத்த பார்க்கின்றனர்.

ஊழியர்களின் ஊதியத்திற்காகவும், செயல்பாட்டு செலவினங்களுக்காகவும் வங்கிகளிடம் கடன் வாங்குவது, BSNLஐ அழிப்பது என்கிற வாதத்தைமுன் வைக்கிறார்கள். இது இவர்களின் சொந்தக் கருத்து அல்ல. BSNL நிறுவனத்திற்கு எந்த ஒரு உதவியும் செய்யாமல் அழிக்க நினைக்கும் DoTயின் கருத்தாகும். தற்போது ஜியோவின் கழுத்தறுப்பு போட்டி காரணமாக இந்திய நாட்டில் உள்ள அனைத்து தனியார் தொலை தொடர்பு நிறுவனங்களும், தங்களை இந்த போட்டியில் நிலை நிறுத்திக் கொள்ள வங்கிகளிடம் இருந்து பல லட்சக்கணக்கான கோடி ரூபாய்களை கடன்களாக பெற்றுள்ளனர் என்பது அனைவருக்கும் AUAB தெரியப்படுத்தி உள்ளது. எனவே இந்த சூழ்நிலையில், வங்கிகளிடம் பெரிய அளவில் கடனை பெறாமலேயே, இது நாள் வரை BSNL தாக்கு பிடித்துள்ளது என்பதே பெரிய விஷயம் தான். தற்போதும் ஒரு சில ஆயிரம் கோடிகளை தான் கடன் பெற முயற்சி செய்து கொண்டுள்ளது. ஆனால், அதனையும் பெற முடியாமல் DoT தடுத்து வருகிறது. செயல்பாட்டு செலவினங்களுக்காக வங்கிகளிடம் கடன் வாங்காமல் எவ்வாறு தரமான சேவை தரமுடியும் என்பதற்கு இந்த வதந்திகளை பரப்பும் அறிவு ஜீவிகளிடம் பதில் ஏதும் இல்லை.

ஓய்வூதியத்தை தருவது அரசாங்கம். ஊதியம் தருவது BSNL என்ற அடிப்படை உண்மையைக் கூட மறைத்து தொழிற்சங்க தலைவர்களை கொச்சைப்படுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கத்தொடு தான் அவர்களின் பிரச்சாரம் உள்ளது. இந்த தலைவர்கள் உள்ளிட்ட பலரின் கடுமையான போராட்டங்களின் காரணமாகத்தான் இன்று DoTயில் பணியில் சேர்ந்து அரசாங்கத்தின் சதித்திட்டம் காரணமாக BSNLல் பணி ஓய்வு பெறுபவர்களுக்கு அரசாங்கமே ஓய்வூதியம் தருகிறது என்பதை வசதியாக மறைக்க பார்க்கிறார்கள். இதனால் இந்த தொழிற்சங்க தலைவர்கள் மட்டுமல்ல, இந்த துறையின் வளர்ச்சிக்காக தங்களின் வாழ்நாள் முழுவதும் ரத்தத்தையும், வியர்வையையும் சிந்தி உழைத்து தனது வயது மூப்பின் காரணமாக ஓய்வு பெற்றுள்ள பல லட்சக்கணக்கான தோழர்களின் ஓய்வு காலம் நிம்மதியாக கழிய வேண்டும் என்பதற்காக இந்த சங்கங்கள் தான் போராடி அரசு ஓய்வூதியத்தை பெற்றுத் தந்துள்ளனர் என்பதை இங்கு பணியாற்றும் அனைத்து தோழர்களும் அறிவார்கள்.

அரசு திட்டமிடும் VRS திட்டத்தை ஏற்றுக் கொண்டு மூத்த தோழர்கள் பணி ஓய்வு பெற்று ஓடி விட வேண்டும் என்கிற அவர்களின் ஆசையை வெளிப்படையாகவே தெரிவித்துள்ளனர்.

வயது முதிர்ந்த தாய் தந்தையரை அனாதை விடுதியில் தள்ளிவிட்டு அவர்களின் உழைப்பில் உருவான இந்த நிறுவனத்தின் பலன்களை தாங்கள் மட்டும் அனுபவிக்க வேண்டும் என்கிற அவர்களின் புத்தி சரியானது தானா? 60 வயது வரை பணியில் இருப்போம் என்ற நம்பிக்கையோடு, தங்களின் எதிர்காலத்திற்காக கடன்களை எல்லாம் வாங்கி வீடு கட்டுவது, குழந்தைகளின் கல்வி மற்றும் திருமணம் போன்றவற்றிற்கெல்லாம் செலவு செய்துள்ள, இந்த இலாகாவின் வளர்ச்சிக்கு இன்னமும் பாடுபட்டுக் கொண்டுள்ளவர்களை இந்த நிறுவனத்தை விட்டு வெளியேறிப் போ என்று சொல்லும் இவர்களின் நிலை பாடு எந்த வகையில் நியாயம்.

அரசு பொதுத்துறை நிறுவனமான BSNLஐ திட்டமிட்டு தனியாருக்கு தாரை வார்க்கும் என்று சொல்வது ஊழியர்களை மிரட்டும் செயல் என்றும், இன்னமும் 25 ஆண்டுகளுக்கு இந்த நிறுவனம் தனியாருக்கு விற்பனை செய்யப்படமாட்டாது என்றும் இவர்கள் கூறும் வாதம் எதன் அடிப்படையில் வந்தது என்று அவர்களுக்கே தெரியாது. மோடி தலைமையிலான அரசு வந்ததிலிருந்து இந்திய நாட்டின் பொதுத்துறை நிறுவனங்களின் 2.1 லட்சம் கோடி ரூபாய்களுக்கான பங்குகள் விற்பனை செய்யபட்டுள்ளது என்பதை இவர்கள் வசதியாக மறைக்க பார்க்கின்றனர். நம்மிடம் இருந்து OCS நிறுவனம் தனியாரான TATAவிற்கு விற்கப்பட்டது என்பதையும், நம் கண் முன்னே இருந்த ஊட்டியின் ஹிந்துஸ்தான் ஃபோட்டோ ஃபிளிம் நிறுவனம் மூடப்பட்டதையும் இவர்களால் மறுக்க முடியுமா?

அரசின் கொள்கைகளை படித்துப் பார்க்கச் சொல்லும் அறிவாளிகளால், பாரதப் பிரதமர் தனது தொலைக்காட்சி பேட்டியில் 'பொதுத்துறை நிறுவன்ங்கள் அழிவதற்காகவே உருவாக்கப்பட்டவை' என்று சொன்னதை ஏன் மறந்து போனார்கள். ஹிந்துஸ்தான் ஏரோ நாடிகல் லிமிடெட் நிறுவனம், இந்திய நாட்டின் பாதுகாப்பு துறையில் உள்ள பொதுத்துறை நிறுவன்ங்கள் உள்ளிட்ட அனைத்து பொதுத்துறை நிறுவனங்களையும் சீரழிக்க வேண்டும் என்று இந்த அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு எதிராக அங்குள்ள அனைவரும் போராடி வருவதையும் இவர்கள் இல்லையென்று கூறுகின்றனர் என்றால் அவர்களின் குறுகிய பார்வையை தான் அது காட்டுகிறது.

இதை விட பெரிய அறிவாளி ஒருவர், தொழிற்சங்கங்களின் தேவையையே கேள்வி எழுப்புகிறார். தொழிற்சங்கங்களால் தான் பல நிறுவனங்களால் மூடப்பட்டதாகவும் தெரிவிக்கின்றனர். தொழிற்சங்க தலைவர்கள் அரசியல் நோக்கத்தோடு போராட்டங்களை நடத்துவதாகவும் இந்த மேதாவிகள் பேசுகின்றனர். இளம் தோழர்களின் வளர்ச்சியில் தொழிற்சங்கங்கள் அக்கறை காட்டுவதில்லையாம்?

உலகம் முழுவதும் உள்ள முதலாளிகளின் கெட்டு போன உளறலை, தொழிலாளர்களின் சிலரே பேசுவது என்பது தான் கொடுமை. இந்த தொழிற்சங்கங்கள் நடத்திய போராட்டங்களும், மோசமாக இவர்கள் விமர்சிக்கும் தலைவர்கள் எல்லாம் கடந்த காலத்தில் செய்த தியாகங்களால் தான் நாம் இன்று பெற்று வரும் சலுகைகள் என்பதையெல்லாம் தொழிலாளர்களுக்கு தெரியாதது என்று இவர்கள் நினைத்துக் கொள்வது வேடிக்கை தான். தொலை தொடர்பு துறையில் இன்று ரிலையன்ஸ் இன்ஃபோகாம், டெலினார், ஏர்செல் நிறுவனங்கள் எல்லாம் தங்கள் சேவையை மூடிவிட்டு ஓடிப்போனது எந்த தொழிற்சங்கங்களின் போராட்டங்களால் என இந்த அறிவு ஜீவிகள் சொல்லட்டுமே? ஆனாலும் இந்த கடுமையான போட்டியிலும் BSNL நிறுவனம் நிலைத்து நிற்பதற்கு காரணம் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பான AUAB நடத்திய வாடிக்கையாளர் சேவை வருடம், புன்முறுவலுடன் கூடிய சேவை, BSNL உங்கள் வாயிற்படியில் மற்றும் ஒருமணி நேர கூடுதல் பணி என்பது உள்ளிட்ட இயக்கங்கள் தான் என்பதை இவர்களுக்கு நினைவு படுத்த வேண்டுமோ? தொழிற்சங்கங்கள் இல்லையென்றால், அவர்களின் போராட்டங்கள்

இல்லையென்றால், இந்த நிறுவனத்தை எப்போதோ பங்கு விற்பனை செய்து தனியாருக்கு தாரை வார்த்திருப்பார்கள் என்பதை இவர்கள் புரிந்துக் கொள்ள வேண்டும்.

இளம் தோழர்களை பற்றியும், அவர்களின் CAREER GROWTH தொடர்பாகவும் ரொம்பவும் அங்கலாய்க்கிறார்கள். 2017ல் நடைபெற்ற நேரடி நியமன JE தேர்வில் பலர் வெற்றிபெற்று முடிவுகளும் அறிவிக்கப்பட்ட பின்பும், மத்திய தொலை தொடர்பு அமைச்சகத்தின் தலையீடு காரணமாக பணி நியமனம் நடக்காமல் இருந்த போது அவர்களுக்காக குரல் கொடுத்தது யார்? தொழிற்சங்கங்கள் தங்களின் இணைய தளத்தில் அரசை கடுமையாக விமர்சித்ததோடு அமைச்சருக்கும் கடிதம் எழுதி, பல கட்ட பேச்சு வார்த்தைகள் மூலம் அந்த பணி நியமனத்திற்கு காரணமாக இருந்தது இந்த தொழிற்சங்கம் தானே? அதன் பின்னரும், நிரப்பப்படாத இடங்களுக்கு அந்த தேர்வில் வெற்றிபெற்று காத்திருந்த தோழர்களுக்கு அதனை பெற்றுத்தந்ததும் இந்த தொழிற்சங்கம் தானே? அது மட்டுமல்லாமல், SC/ST தோழர்களுக்கு தகுதி மதிபெண்களை குறைக்க செய்து அவர்களுக்கு பணி நியமனம் பெற்றுத் தந்ததும் இந்த தொழிற்சங்கம் தானே? பல வருடங்களாக JTO இலாகா தேர்வு நடைபெறாமல் இருந்த நேரத்தில் மிகச்சரியாக தலையிட்டு அதனை அனைத்து வருடங்களுக்கும் நடத்தி ஆயிரக்கணக்கான தோழர்களை பதவி உயர்வு பெறச் செய்தது இந்த சங்கம் தானே? அதிலும் SC/ST தோழர்களுக்கு தகுதி மதிபெண்களை குறைக்க செய்து அவர்களுக்கு பணி நியமனம் பெற்றுத் தந்ததும் இந்த தொழிற்சங்கம் தானே?

இப்பொழுது பிப்ரவரி மாத ஊதியம் கிடைக்கவில்லை என்பது யதார்த்தமான விஷயம். இந்த நிலை வரும் என்று தானே, வங்கிகளிடம் இருந்து BSNL கடன் பெறுவதற்கான அனுமதியை அரசு வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியும், BSNLக்கு சொந்தமான காலியிடங்களை வாடகைக்கு/குத்தகைக்கு விட்டு வருடத்திற்கு பல்லாயிரக்கணக்கான ரூபாய் வருவாயை உயர்த்திட BSNL நிர்வாகம் கொடுத்துள்ள நில மேலாண்மை திட்டத்திற்கு ஒப்புதல் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியும் மூன்று நாட்கள் வேலை நிறுத்த போராட்டம் உள்ளிட்ட பல்வேறு இயக்கங்களை நடத்தியது BSNLல் உள்ள தொழிற்சங்கங்கள் தானே!

அந்த போராட்டத்தில் பங்கேற்காமல் இருந்து விட்டு தற்போது பலர் அறிக்கைகள் மூலமாக இலவச ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர்.

நேற்றல்ல, இன்றல்ல, என்றைக்குமே தொழிலாளர்களின் உரிமைகளுக்காகவும், அவர்கள் பணியாற்றும் நிறுவனத்தை பாதுகாப்பதற்கும் கருத்தால் மற்றும் கரத்தால் உழைக்கும் தொழிலாளர்களை ஒன்று படுத்தி போராடும் தொழிற்சங்க இயக்கங்களால் மட்டுமே முடியும். தனி நபர்களாலோ, பகுதிகளாக, கேடர்களாக ஊழியர்களை பிரித்து அதில் சுகம் காணும் இயக்கங்களாலோ இயலாது என்பதை BSNLல் உள்ள தொழிலாளர்கள் புரிந்துள்ளார்கள். இவர்களை விட பலமாக ஊழியர்களை பிரிக்க நினைத்தவர்களை BSNL ஊழியர்கள் எந்த காலத்திலும் ஆதரித்தது இல்லை என்பது தான் சரித்திரம். எனவே ஒரு சில சுயநலமிகள் அனுப்பும் விஷமத்தனமான செய்திகளை அனுமதிக்காமல் புறந்தள்ளுவோம். இந்த BSNLஐ பாதுகாக்கவும், அதில் பணியாற்றும் ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளின் கோரிக்கைகளை வென்றடைவதற்காகவும் போராடி வரும் தொழிற்சங்கங்களின் மீது நாம் வைத்துள்ள நம்பிக்கையை கெட்டிப்படுத்துவோம். நமது உயிரினும் மேலான இந்த BSNLஐ பாதுகாப்போம். நமது உரிமைகளை உறுதியுடன் போராடி வென்றடைவோம்.-

வாழ்த்துக்களுடன்,

A.பாபு ராதாகிருஷ்ணன், மாநில செயலாளர்
BSNL ஊழியர் சங்கம்.